COVID-19 தடுப்பூசி பாதுகாப்பு: தெரிந்து கொள்ள வேண்டியவை

Vaccinate WA
CovidVaccineWA.org

தடுப்பூசிகள் பாதுகாப்பானவை

யுனைடெட் ஸ்டேட்ஸில் எங்களிடம் உள்ள COVID-19 தடுப்பூசிகள் யு.எஸ் வரலாற்றில் மிகக் கடுமையான பாதுகாப்புச் சோதனைகளை கடந்து வந்துள்ளன[1]. மற்ற வெற்றிகரமான தடுப்பூசிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே கடுமையான செயல்முறையைப் பயன்படுத்தியே இந்த தடுப்பூசிகளும் உருவாக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அனைத்து தடுப்பூசிகளும், யு.எஸ். Food and Drug Administration (FDA, உணவு மற்றும் மருந்து நிர்வாகம்) ஆல் முழுமையாகவோ அல்லது அவசரகால பயன்பாட்டிற்கு மட்டுமோ அங்கீகரிக்கப்பட்டுள்ளது மேலும் அவற்றில் பாதுகாப்புக் குறித்த குறைபாடுகள் எதுவும் இல்லை என FDA கண்டறிந்துள்ளது. சுயேட்சை நிபுணர்களும் ஆய்வுகளை மதிப்பாய்வு செய்ததில் எந்த ஒரு குறைபாடுகளும் இல்லை. இந்த தடுப்பூசிகள் Western States Pact (மேற்கத்திய நாடுகளின் ஒப்பந்தத்தின்) (ஆங்கிலம் மட்டும்) ஓர் அங்கமான Scientific Safety Review Workgroup (அறிவியல் பாதுகாப்பு மதிப்பாய்வு பணிக்குழு)வின் மருத்துவ நிபுணர்களால் சுய மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றுள்ளது. மேலும் தகவல்களுக்கு எங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவைப் பார்க்கவும்.

பொதுமக்கள் தடுப்பூசிகளைப் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனானது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிது. அமெரிக்காவில் பாதுகாப்பு சிக்கல்களைக் கண்டறிந்து அவை நிகழும்போது விரைவாக நடவடிக்கை எடுக்க பல அமைப்புகள் உள்ளன. COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்த, Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) ஆனது தடுப்பூசி பாதுகாப்பைக் கண்காணிக்கும் நாட்டின் திறனை விரிவுபடுத்தி வலுப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, COVID-19 தடுப்பூசி மருத்துவப் பரிசோதனைகளின் போது பார்த்திராத பிரச்சனைகளைத் தடுப்பூசி பாதுகாப்பு நிபுணர்கள் கண்காணித்து கண்டறிய முடியும்.

தடுப்பூசி குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் நீண்டகாலம் உடல்நலப் பிரச்சனை உள்ளவர்களுக்கும் கூட பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் உள்ளது. அதிகமான மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்வதால், நாங்கள் பாதுகாப்பு மற்றும் பக்க விளைவுகள் குறித்த கூடுதல் தரவைப் பெறுகிறோம். COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்றும் தீவிரமான பக்க விளைவுகள் ஏற்படுவது அரிதானவை என்றும் தரவுகள் காட்டுகின்றன.

தடுப்பூசிகள் வேலை செய்கின்றன

COVID-19 தடுப்பூசிகள் பல வழிகளில் உங்களைப் பாதுகாக்கும். அவை COVID-19 ஐத் தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. நீங்கள் COVID-19 தொற்றால் பாதிக்கப்பெற்றால், தீவிரமாக நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்பைத் தடுப்பூசி வெகுவாகக் குறைக்கும்; தடுப்பூசித் தொடரைப் போட்டு முடிப்பது நீங்கள் மருத்துவமனையில் சேருவதற்கான வாய்ப்புகளையும், COVID-19 மூலம் இறக்கும் அபாயத்தையும் குறைக்கிறது. சில தடுப்பூசிகள் மற்றவைகளை விட சிறந்தவை என்று தோன்றும் தகவல்களை நீங்கள் பார்த்திருக்கலாம், இருப்பினும் தற்போது கிடைக்கக்கூடிய அனைத்துத் தடுப்பூசிகளும் COVID-19 ஐத் தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருந்தன என்பதை மருத்துவ பரிசோதனைகள் காட்டின. வெவ்வேறு COVID-19 தடுப்பூசிகளின் மருத்துவப் பரிசோதனைகள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, எங்கள் COVID-19 Vaccine Safety and Effectiveness (COVID-19 தடுப்பூசி பாதுகாப்பு மற்றும் செயல்திறன்) | Washington State Department of Health (வாஷிங்டன் மாநில சுகாதாரத் துறை) பக்கத்தைப் பார்வையிடவும்.

கடுமையான COVID-19 நோயைத் தடுத்துப் போராடுவதில் ஒவ்வொரு தடுப்பூசியிலும் குறைந்தபட்சம் 85 சதவிகித செயல்திறன் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பலருக்கும் COVID-19 அறிகுறிகள் வராமல் தடுப்பூசிகள் தடுத்தன:

- Moderna, 94%
- Pfizer-BioNTech, 95%
- Johnson & Johnson (Janssen), 74%
- Novavax, 90.4%

[1] Centers for Disease Control and Prevention, "Safety of COVID-19 Vaccines (COVID-19 தடுப்பூசிகளின் பாதுகாப்பு)". மார்ச் 25, 2021, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.cdc.gov/coronavirus/2019-ncov/vaccines/safety/safety-of-vaccines.html..

பக்க விளைவுகள் இயல்பானவை

நீங்கள் தடுப்பூசியின் மூலம் COVID-19 தொற்றைப் பெற மாட்டீர்கள். இருப்பினும், மற்ற தடுப்பூசிகளைப் போலவே, நபருக்கு நபர் மாறுபடும் சில பக்க விளைவுகளை நீங்கள் உணரலாம். சிலருக்கு எந்தவித அசௌகரியமும் இருக்காது, மற்றவர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பக்கவிளைவுகளைக் கொண்டிருக்கலாம். பக்க விளைவுகள் தடுப்பூசி வேலை செய்கிறது என்பதற்கான அறிகுறிகள் ஆகும். இரு மருந்தளவு தடுப்பூசிகளின், இரண்டாவது மருந்தளவுக்குப் பின் வரும் பக்க விளைவுகள் மோசமாக இருக்கலாம் முடிந்தால், மருந்து செலுத்திய பின்பு ஓரிரு நாட்கள் ஓய்வெடுக்கவும் குணமடையவும் உங்களுக்கான நேரத்தைக் கொடுங்கள். பொதுவாக பக்க விளைவுகள் சில நாட்களுக்குப் பிறகு மறைந்துவிடும் நீங்கள் பக்கவிளைவுகளை உணரவிட்டாலும் கூட, உங்கள் உடல் COVID-19 வைரஸுக்கு எதிராக பாதுகாப்பை உருவாக்குகிறது. இரண்டு மருந்தளவுகள் தேவைப்படும் COVID-19 தடுப்பூசிகளுக்கு, உங்கள் இரண்டாவது மருந்தளவைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் இரண்டாவது மருந்தளவு எடுத்துக்கொண்டபின் இரண்டு வாரங்கள் வரை முழுமையாகப் பாதுகாக்கப்பட மாட்டீர்கள்.

வயதுக்கேற்ப ஏற்படும் பொதுவான பக்க விளைவுகள்

6 மாதங்கள் - 3 வயதுடையவர்கள்	4-17 வயதுடையவர்கள்	18 மற்றும் அதற்கு மேற்பட்ட பெரியவர்கள்
பொதுவான பக்க விளைவுகள் பின்வருமாறு:	இரண்டாவது டோஸுக்குப் பிறகு ஏற்படும் பக்க விளைவுகள் மிகவும் பொதுவானவை.	பொதுவான பக்க விளைவுகள் பின்வருமாறு:
கை அல்லது காலில் தடுப்பூசி செலுத்திய இடத்தில் வலி	தடுப்பூசி செலுத்திய இடத்தில் வலி, வீக்கம் மற்றும் சிவத்தல்	தடுப்பூசி செலுத்திய இடத்தில் வலி, வீக்கம் மற்றும் சிவத்தல்
வீங்கிய நிணநீர் முடிச்சுகள்	சோர்வு	சோர்வு
எரிச்சல் அல்லது அழுகை	தலைவலி	தலைவலி
தூக்கக் கலக்கம்	தசைவலி அல்லது உடல் வலி	தசை வலி
பசியின்மை	குளிர்	காய்ச்சல் மற்றும்/அல்லது குளிர்
	வீங்கிய நிணநீர் முடிச்சுகள்	குமட்டல்

ஒவ்வாமை எதிர்வினையின் அறிகுறிகள்

தடுப்பூசிக்கு ஒவ்வாமை எதிர்வினைகள் மிகவும் அரிதானவையாக இருந்தாலும், அவை நிகழலாம். நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்ட பின் ஒவ்வாமை ஏற்பட்டால், குறைந்தது 15 நிமிடங்களாவது கிளினிக் கவனிக்கும். உங்களுக்குப் பதிலளிக்கவும், எவ்வாறு உதவுவது என்றும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிளினிக்கிலிருந்து வெளியேறிய பிறகு உங்களுக்கு ஒவ்வாமை இருந்தால், 911 ஐ அழைக்கவும். ஒவ்வாமை எதிர்வினையின் அறிகுறிகள் பின்வருமாறு: சுவாசிப்பதில் சிக்கல், உங்கள் முகம் மற்றும் தொண்டை வீங்கிப் போதல், வேகமான இதய துடிப்பு, உங்கள் உடல் முழுவதும் ஒரு மோசமான அரிப்பு, தலைச்சுற்றல் மற்றும் பலவீனம்.

எந்தவொரு பாதுகாப்பு பிரச்சனைகளை கவனிப்பதற்கு எங்களுக்கு உதவுங்கள்

எந்த பக்க விளைவுகளையும் பற்றி புகாரளிக்க V-safe ல் பதிவு செய்க: vsafe.cdc.gov. உங்களது பங்கேற்பு அனைவருக்குமான தடுப்பூசிகளைப் பாதுகாப்பானதாக வைத்திருக்க உதவுகிறது.

நீங்கள் அல்லது உங்கள் தடுப்பூசி வழங்குநர் Vaccine Adverse Event Reporting System (VAERS, தடுப்பூசி பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் அமைப்பு) க்கு கடுமையான பக்க விளைவுகளைப் புகாரளிக்கலாம். FDA, Centers for Disease Control and Prevention (CDC) மற்றும் Washington State Department of Health (DOH, வாஷிங்டன் மாநில சுகாதாரத் துறை) ஆகியவை போக்குகள் அல்லது சாத்தியமான சிக்கல்களைக் காண VAERS ஐப் பயன்படுத்துகின்றன.

நீங்கள் ஒரு அறிக்கையை vaers.hhs.gov இல் சமர்ப்பிக்கலாம். VAERS மற்றும் பிற பாதுகாப்பு கண்காணிப்பு அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றி மேலும் www.doh.wa.gov/immunization/vaccinesafetyஎன்ற இணையதளத்தில் அறியவும்..

பல இனங்கள் மற்றும் இன மக்கள் சோதனைகளில் பங்கேற்றனர்

ஒவ்வொரு தடுப்பூசியையும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மீது விஞ்ஞானிகள் பரிசோதித்தனர்.

Moderna தடுப்பூசி பரிசோதனைகள் (யு.எஸ்) [2]
பங்கேற்பாளர்கள்:



Pfizer-BioNTech தடுப்பூசி பரிசோதனைகள் (யு.எஸ்) [3]
பங்கேற்பாளர்கள்:



Johnson & Johnson தடுப்பூசி பரிசோதனைகள் (உலகளாவிய)[4]
பங்கேற்பாளர்கள்:



Novavax தடுப்பூசி பரிசோதனைகள் (யு.எஸ்) [5]
பங்கேற்பாளர்கள்:



[2] Food and Drug Administration. "FDA Briefing Document: Moderna COVID-19 Vaccine", Vaccines and Related Biological Products Advisory Committee (தடுப்பூசிகள் மற்றும் அது தொடர்பான உயிரியல் தயாரிப்புகள் ஆலோசனைக் குழு) கூட்டம். டிசம்பர் 17, 2020, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/144434/download. .

[3] Food and Drug Administration. "FDA Briefing Document: Pfizer-BioNTech COVID-19 Vaccine", Vaccines and Related Biological Products Advisory Committee கூட்டம். டிசம்பர் 10, 2020, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/144245/download. .

[4] Food and Drug Administration. "FDA Briefing Document: Janssen Ad26.COV2.S Vaccine for the Prevention of COVID-19", Vaccines and Related Biological Products Advisory Committee கூட்டம். பிப்ரவரி 26, 2021, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/146217/download. .

[5] Food and Drug Administration. "FDA Briefing Document: Novavax COVID-19 Vaccine", Vaccines and Related Biological Products Advisory Committee கூட்டம். பிப்ரவரி 7, 2022, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/158912/download.

✦ AIAN/NHOPI ஆனது அமெரிக்க இந்தியர், அலாஸ்காவை பூர்வீகமாகக் கொண்டவர் மற்றும் ஹவாயை பூர்வீகமாகக் கொண்டவர், பிற பசிபிக் தீவுவாசிகள் ஆகிய பரிசோதனை பங்கேற்பாளர்களுக்கான ஒருங்கிணைந்த தரவைக் குறிக்கிறது.

தடுப்பூசி போடுவது குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் உங்களின் நம்பகமான சுகாதார வழங்குநர் அல்லது கிளினிக் பணியாளருடன் பேசுங்கள்

ஒவ்வாமைகள்

- தடுப்பூசியில் உள்ள எந்தவொரு மூலப்பொருளாலும் ஒவ்வாமை ஏற்படாத எவருக்கும் தடுப்பூசியை CDC பரிந்துரைக்கிறது. இந்தத் தடுப்பூசிகளில் மற்ற உணவுகளில் காணப்படுவது போன்ற பொதுவான ஒவ்வாமை மருந்துகள் இல்லை, எனவே COVID-19 தடுப்பூசி எடுத்துக்கொள்ளும்போது மற்ற ஒவ்வாமைகளைப் பற்றிக் கவலைப்படக்கூடாது
- COVID-19 தடுப்பூசிகளின் மூலமான ஒவ்வாமை பெரும்பாலும் தடுப்பூசியில் உள்ள கொழுப்புகளால் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது, இது பாலிஎதிலீன் கிளைகோல் (PEG) மற்றும் பாலிசார்பேட் என அழைக்கப்படுகிறது.
- மற்ற தடுப்பூசிகளைப் போலவே, இந்த தடுப்பூசிகளிலும் கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை உள்ளன, இவை உடலில் தடுப்பூசிகள் சிறப்பாக செயல்பட உதவுகின்றன. அனைத்து மூலப் பொருட்களும் பாதுகாப்பானவை மற்றும் தடுப்பூசிகள் அவற்றின் வேலையைச் செய்யத் தேவையானவை ஆகும்.
- தடுப்பூசிகள் முட்டை இல்லாதவை, இரப்பர் இல்லாதவை, மற்றும் பாதுகாப்புக் காரணிகள் அற்றவை. இந்த தடுப்பூசிகள் முட்டைகளில் வளர்க்கப்படுவதில்லை

நெறிமுறைகள்

COVID-19 தடுப்பூசியின் மூலப் பொருட்கள் பாதுகாப்பானவை மற்றும் தடுப்பூசிகள் அவற்றின் வேலையைச் செய்யத் தேவையானவை. Johnson & Johnson தடுப்பூசியின் ஒரு பகுதியானது 35 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புகளிலிருந்து வந்த உயிரணுக்களின் ஆய்வகத்தால் வளர்க்கப்பட்ட பிரதிகளுக்குள் தயாரிக்கப்படுகிறது. சிக்கன் பாக்ஸ், ரூபெல்லா, ஹெபடைடிஸ் ஏ உள்ளிட்ட பல தடுப்பூசிகளும் இம்மாதிரியாகவே செய்யப்படுகின்றன. எந்தவொரு தடுப்பூசியும் மனித செல்கள் (கரு செல்கள் உட்பட), COVID-19 வைரஸ், மரப்பால், பாதுகாப்புக் காரணிகள் அல்லது பன்றி இறைச்சி பொருட்கள் அல்லது ஜெலட்டின் உள்ளிட்ட எந்தவொரு விலங்குகளின் தயாரிப்புகளையும் கொண்டிருக்கவில்லை. இந்த தடுப்பூசிகள் முட்டைகளில் வளர்க்கப்படுவதில்லை மற்றும் முட்டை பொருட்கள் சேர்க்கப்படுவதுமில்லை.

Pfizer மற்றும் Moderna தடுப்பூசி சோதனைகளில் கலந்துகொண்ட U.S. பங்கேற்பாளர்களில் சுமார் 30% பேர் கறுப்பர்கள், பழங்குடியினர் அல்லது பிற நிறமுள்ளவர்கள் மற்றும் பாதி பேர் வயதானவர்கள். Johnson & Johnson தடுப்பூசி சோதனைகளில் பங்கேற்றவர்களில் சுமார் 38% பேர் கறுப்பர்கள், பழங்குடியினர் அல்லது பிற நிறமுள்ளவர்கள் மற்றும் பாதி பேர் வயதானவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

மருத்துவ நிலைகள்

- மருத்துவ நிலைமைகளில் உள்ளவர்களுக்கும் COVID-19 தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு தடுப்பூசி சோதனையிலும் உள்ள பங்கேற்பாளர்களில் 20 முதல் 45 சதவீதம் பேர் உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய், கல்லீரல் நோய் மற்றும் எச்.ஐ.வி போன்ற பாதிப்புகளைக் கொண்டிருந்தனர்.
- எங்களிடம் உள்ள தடுப்பூசிகள் பெரும்பாலான வைரஸ் மாறுபாடுகளுக்கு எதிராக 90% பயனுள்ளதாக இருந்த போதிலும், மிதமான மற்றும் கடுமையான நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட நபர்கள் எப்போதும் வலுவான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதில்லை என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இரண்டு டோஸ் தொடரை செலுத்தியும் போதுமான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாதவர்களுக்கு, பூஸ்டர் டோஸுக்கு முன், மூன்றாவது கூடுதல் டோஸ்,பரிந்துரைக்கப்படுகிறது.
- கருத்தரித்தல் மற்றும் குழந்தை பிறப்பு துறையைச் சார்ந்த மருத்துவ நிபுணர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் அல்லது கருத்தரிக்க திட்டமிட்டுள்ள பெண்கள் அனைவருக்கும் COVID-19 தடுப்பூசியை பரிந்துரைக்கின்றனர். கர்ப்ப காலத்தில் COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று தரவுகள் காட்டுகின்றன. உண்மையில், சில ஆய்வுகள் தடுப்பூசி போடப்பட்ட பெண்கள் கர்ப்பம் மற்றும் பாலூட்டுதல் மூலம் தங்கள் குழந்தைக்கு COVID-19 க்கு எதிரான ஆன்டிபாடிகளைக் (எதிர்ப்பான்கள்) கூட அனுப்ப முடியும் என்பதைக் காட்டுகின்றன. கர்ப்பிணிப் பெண்கள் COVID-19 நோயால் பாதிக்கப்பட்டால், மரணம் உள்ளிட்ட, பல்வேறு அபாயங்களை சந்திக்கும் நிலை ஏற்படலாம். தடுப்பூசிகள் சிறந்த பாதுகாப்பு.

Washington State Department of Health

DOH 348-799 October 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.